8

# குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள்

TML 008/**2014**

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



எல்லோரும் பெண்கள்.
ஒரே குடும்பச் சட்டம்.
அறியுங்கள் உங்கள் உரிமைகளை.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள்

*சட்டம்சார்ந்த விடயங்களின் அடிப்படை விளக்கத்தை உங்களுக்குத் தருவதே இந்தக் கையேட்டின் நோக்கமாகும். தனிப்பட்ட சட்டபூர்வ ஆலோசனையை மற்றும் உதவியை இது பிரதியீடு செய்யமாட்டாது. குடும்பச் சட்ட விவகாரங்களில் நீங்கள் சம்பந்தப்பட்டிருந்தால், உங்களுக்குள்ள தெரிவுகளை விளங்கிக்கொள்வதற்கும் உங்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் முடியுமான விரைவில் சட்டபூர்வ உதவியைப் பெற்றுக்கொள்வது சிறந்தது. ஒரு குடும்பச் சட்ட சட்டத்தரணியை எப்படிக் கண்டுபிடிப்பது மற்றும் பணம் கொடுப்பது என்பது பற்றிய மேலதிக விபரங்களுக்கு, "உங்களுடைய குடும்பச் சட்டப் பிரச்சினைகளுக்கு உதவியைக் கண்டறிதல்" என்ற எங்களுடைய கையேட்டைப் பாருங்கள்.*
*"ஒரு குடும்பச் சட்ட சட்டத்தரணியைத் தேடல்" மற்றும் குடிவரவுப் பிரச்சினைகள் சம்பந்தமான இணையக் கருத்தரங்குகளையும் நீங்கள் பார்க்க விரும்பலாம். இந்த ஆதாரவளங்கள் அனைத்தும் www.onefamilylaw.ca எனும் எங்களுடைய இணையத்தளத்தில் இருக்கின்றன.*

குடும்ப முறிவு கஷ்டத்தையும் மன அழுத்தத்தையும் தரும். நீங்களோ அல்லது உங்களுடைய துணைவரோ இன்னொரு நாட்டிலிருந்து கனடாவுக்கு வந்திருந்தால், உங்களுடைய உறவு முடிவடையும் போது, குடும்பச் சட்டம் மற்றும் குடிவரவுச் சவால்கள் என இரண்டையும் நீங்கள் எதிர்நோக்கலாம். உதாரணத்துக்கு, நிதி ஆதரவு, உங்களுடைய பிள்ளைகள் பற்றிய ஒழுங்குகள் மற்றும் உங்களுடைய குடும்பச் சொத்துப் பிரிப்பு பற்றி அநேகமாக நீங்கள் முடிவு எடுக்க வேண்டியிருக்கும். நீங்கள் கனடியக் குடியுரிமையாளராக இல்லாவிட்டால், உங்களுடைய குடிவரவுத் தகுதிநிலை உங்களுடைய துணைவருடன் அல்லது ஏனைய குடும்ப நபருடன் தொடர்புடையதாக இருக்கலாம். பின்வரும் விடயங்கள் பற்றி நீங்கள் கவலைப்படலாம்:

- கனடாவில் நீங்கள் இருக்க முடியுமா
- உங்களுடைய பிள்ளைகளிடமிருந்து நீங்கள பிரிக்கப்படுவீர்களா
- உங்களைப் பொறுப்பேற்றிருந்த உங்களுடைய துணைவரின் உறவை விட்டு நீங்கள் விலகியிருந்தால் உங்களை எப்படிப் பராமரிப்பது.

## குடும்ப நீதிமன்றத்தில் உரிமைகள்

குடும்பச் சட்டத்தின் கீழ், கனடாவில் பிறந்த பெண்களுக்குள்ள அதே உரிமைகளும் பொறுப்புக்களும் குடிவரவாளர், அகதி மற்றும் தகுதிநிலையற்ற நிலைகளிலுள்ள பெண்களுக்கும் உண்டு. உங்களுடைய துணைவரிடமிருந்து நீங்கள் பிரியும் போது, பிள்ளைகளுக்கான பொறுப்பு அல்லது அணுகல், பிள்ளைகளுக்கான ஆதரவு, வாழ்க்கை துணைக்கான ஆதரவு போன்றவற்றுக்கு விண்ணப்பிக்க நீங்கள் நீதிமன்றத்துக்குப் போகலாம். அத்துடன் உங்களுடைய குடும்பச் சொத்தில் ஒரு பங்கை வழங்கும்படி நீங்கள் நீதிமன்றத்தைக் கேட்கலாம். உங்களுடைய குடிவரவுத் தகுதிநிலை எதுவாக இருந்தாலும் குடும்ப நீதிமன்றத்துக்கு நீங்கள் போக முடியும்.

நீதிமன்றச் செயல்முறையில் நீங்கள் பங்கேற்றால் உங்களை நீங்கள் அடையாளப்படுத்த வேண்டும், அனைத்துப் பெண்களுக்கும் உள்ளது போல் அதே குடும்பச் சட்ட உரிமைகள் உங்களுக்கும் இருந்தாலும் கூட, கனடாவில் சட்டரீதியான தகுதிநிலை உங்களுக்கு இல்லாவிட்டால், குடிவரவு அதிகாரிகளின் கவனத்துக்கு நீங்கள் உட்படலாம். அத்துடன் நீங்கள் நாடு கடத்தப்படலாம். கனடாவில் நீங்கள் இருப்பதற்கான உரிமை உங்களுடைய குடிவரவுத் தகுதிநிலையில் தங்கியுள்ளது. உங்களையும் உங்களுடைய பிள்ளைகளையும் பாதுகாப்பதற்கு, உங்களுடைய உரிமைகளும் உங்களுக்குள்ள தெரிவுகளும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

## உறவு முறிவும் குடிவரவுப் பிரச்சினைகளும்

உங்களுடைய உறவு முறியும் போது, கனடாவில் நீங்கள் இருப்பதற்கான உரிமை உங்களுடைய குடிவரவுத் தகுதிநிலையில் தங்கியுள்ளது. சட்டத்தின் இந்தப் பகுதி மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளது. உங்களுடைய குடிவரவுத் தகுதிநிலை ஆபத்தில் இருக்கலாம் என நீங்கள் நினைத்தால், உங்களுக்குள்ள சட்டபூர்வமான தெரிவுகளைக் கண்டறிவதற்கு உடனடியாக ஒரு குடிவரவுச் சட்டத்தரணியுடன் கதைப்பது மிகவும் முக்கியமாகும்.

## நிரந்தர வதிவிடவாளர்கள்

ஒரு நிரந்தர வதிவிடவாளராக நீங்கள் வருவதற்கு உங்களுடைய துணைவர் (ஒரே பால் துணைவர் உள்ளடங்கலாக) பொறுப்பேற்றிருந்து, நிரந்தர வதிவுரிமை உங்களுக்கு வழங்கப்பட **முன்னர்** உங்களுடைய உறவு முறிந்தால், உங்களுடைய குடிவரவுத் தகுதிநிலைக்கு ஆபத்து ஏற்படலாம் அத்துடன் கனடாவிலிருந்து நீங்கள் வெளியேற்றப்படலாம்.

உங்களுடைய உறவு முறியும் போது, ஏற்கனவே உங்களுடைய நிரந்தர வதிவுரிமையில் எந்த வித நிபந்தனைகளும் அற்ற ஒரு நிரந்தர வதிவிடவாளராக நீங்கள் இருந்தால், உங்களுடைய துணையிடமிருந்து பிரிந்து விட்டீர்கள் என்பதற்காக அந்தத் தகுதிநிலையை நீங்கள் இழக்க மாட்டீர்கள் அத்துடன் கனடாவிலிருந்து வெளியேற்றப்படவும் மாட்டீர்கள். நீங்கள் கனடாவுக்கு வருவதற்கு உங்களுடைய துணை பொறுப்பேற்றிருந்தாலும் இது பொருந்தும்.

ஒரு நிரந்தர வதிவிடவாளராக நீங்கள் வருவதற்காக, உங்களைப் பொறுப்பேற்ற உங்களுடைய துணைவருடனான உங்களுடைய உறவு முறிந்திருந்தாலும் கூட, உங்களுக்கு நிரந்தர வதிவுரிமை வழங்கப்பட்ட பின்னரான 3 வருடங்களுக்கு உங்களுக்கான நிதிரீதியான ஆதரவை உங்களைப் பொறுப்பேற்றவர் தர வேண்டும். அந்த 3 வருட பொறுப்பேற்றல் காலத்துக்கும், உங்களைப் பொறுப்பேற்றவர் உங்களைத் தொடர்ந்து பராமரிக்க முடியாமல் அல்லது பராமரிக்காமல் இருந்தால் உங்களைப் பராமரிப்பதற்காக நீங்கள் சமூக உதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் பொறுப்பேற்ற உங்களுடைய துணைவருடனான உங்களுடைய உறவு முறிந்தாலும், 3- வருடப் பொறுப்பேற்றல் காலம் முடியும் வரைக்கும் உங்களுடைய துணைவருக்கு நீங்கள் தான் நிதிரீதியாகப் பொறுப்புள்ளவர் என்பதை அறிந்திருங்கள். அந்த 3 வருட பொறுப்பேற்றல் காலத்தில் அவன் அல்லது அவள் சமூக உதவிக்குப் போனால் நீங்கள் ஒன்றாக இல்லாவிட்டாலும் கூட, இந்தப் பணத்தை அரசாங்கத்துக்கு நீங்கள் அநேகமாக திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும்.

## நிபந்தனைக்குட்பட்ட நிரந்தர வதிவிடவாளர்கள்

சில நிரந்தர வதிவிடவாளர்களுக்கு, நிரந்தர வதிவுரிமைக்கான அவர்களுடைய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் வரும் முதல் 2 வருடங்களுக்கு நிபந்தனைக்குட்பட்ட நிரந்தர வதிவுரிமை வழங்கப்படுகின்றது. பொறுப்பேற்பவரும், பொறுப்பேற்கப்பட்ட துணைவரும் நிரந்தர வதிவுரிமை வழங்கப்பட்ட பின்னரான 2 வருடங்களும் உண்மையான ஒரு உறவில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே **நிபந்தனைக்குட்பட்ட நிரந்தர வதிவுரிமை** என்பதன் கருத்தாகும். அந்த 2 வருட காலத்தில் உறவு முறிந்தால், பொறுப்பேற்கப்பட்ட அந்தத் துணைவர், அவளது அல்லது அவரது நிரந்தர வதிவுரிமை நிலையை இழக்கலாம்.

துணைவர்கள், பின்வரும் நிலைகளில் இருந்தால் மட்டுமே அவர்களுக்கு இந்த நிபந்தனைக்குட்பட்ட நிரந்தர வதிவுரிமை பொருந்தும்:

- **ஒக்ரோபர் 25, 2012** அன்று அல்லது அதன் பின்னர் அவர்களின் பொறுப்பேற்கும் விண்ணப்பம் கையளிக்கப்பட்டிருந்தால் மற்றும்
- அவர்கள் விண்ணப்பித்த போது அவர்களின் உறவு 2 வருடங்கள் அல்லது அதற்குக் குறைவாக இருந்திருந்தால் மற்றும்
- அவர்கள் விண்ணப்பித்த போது அவர்களுக்குப் **பிள்ளைகள் எவரும் பிறக்காமல் இருந்திருந்தால்.**

உங்களுடைய விண்ணப்பம் கையளிக்கப்பட்ட பின்னர் உங்களுக்கு ஒரு பிள்ளை பிறந்தால் அது நிலைமையை மாற்ற மாட்டாது. கனடாவுக்குள்ளும் கனடாவுக்கு வெளியிலும் கையளிக்கப்பட்ட வாழ்க்கைத் துணைக்கான பொறுப்பேற்றல் விண்ணப்பங்களுக்கு இந்த நிபந்தனை பொருந்தும்.

நிபந்தனைக்குட்பட்ட தேவைகளுக்கு **விதிவிலக்குகள்** உள்ளன. பின்வரும் ஏதாவது ஒன்றுக்கான ஆதாரங்களை உங்களால் காட்ட முடியுமானால் அந்த நிபந்தனையை உங்களால் நீக்கக் கூடியதாக இருக்கலாம்:

- உங்களைப் பொறுப்பேற்றவர் இறந்துவிட்டார்
- உங்களை அல்லது உங்களுடைய பிள்ளைகளை அல்லது அந்த வீட்டில் உங்களுடன் வசிக்கும் ஒரு உறவினரை, உங்களைப் பொறுப்பேற்றவர்

துன்புறுத்துவதால் அல்லது புறக்கணிப்பதால் உங்களுடைய உறவு முறிகிறது அல்லது

- நீங்கள் அல்லது உங்களுடைய பிள்ளைகள் அல்லது அந்த வீட்டில் உங்களுடன் வசிக்கும் ஒரு உறவினர், உங்களைப் பொறுப்பேற்றவரின் உறவினர் ஒருவரால் துன்புறுத்தப்படுவதிலிருந்து அல்லது புறக்கணிப்பதிலிருந்து உங்களைப் பொறுப்பேற்றவர் பாதுகாக்கத் தவறுகிறார்.

துன்புறுத்தல், உடல்ரீதியானதாக, பாலியல்ரீதியானதாக, நிதிரீதியானதாக மற்றும்.்.அல்லது மனரீதியானதாக இருக்கலாம். உணவு, உடை, மருத்துவக் கவனிப்பு, இருப்பிடம் போன்ற வாழ்க்கைக்கு அவசியமானவற்றை வழங்குவதற்குத் தவறுவதும், ஒரு விடயத்தை வழங்கத் தவறுவதால், பாரதூரமான தீங்குக்கான ஆபத்து ஒன்றை விளைவிப்பதும் புறக்கணிப்பு ஆகும்.

**a. நிபந்தனைக்குட்பட்ட நிரந்தர வதிவுரிமைக்கான விதிவிலக்கு ஒன்றுக்கு நான் எப்படி விண்ணப்பிக்கலாம்?**

மேலதிக தகவல்களைப் பெற அல்லது நிபந்தனைக்குட்பட்ட நிரந்தர வதிவுரிமைக்கான விதிவிலக்குகளுக்கு விண்ணப்பிப்பதற்கு கனடாக் **குடியுரிமை மற்றும் குடிவரவை (CIC)** ஐ, 1-888-242-2100 ல் தொடர்புகொள்ளுங்கள். உங்களைப் பொறுப்பேற்றவர் இறந்துவிட்டதன் காரணமாக விதிவிலக்குக்கு விண்ணப்பிப்பதற்கு, அந்த இறப்புக்கான ஆதாரத்தையும் உங்களைப் பொறுப்பேற்றவர் இறக்கும்வரை அவருடன் ஒன்றாக ஒரு உண்மையான உறவில் நீங்கள் வாழ்ந்தீர்கள் என்பதற்கான ஆதாரத்தையும் நீங்கள் காட்ட வேண்டும்.

துன்புறுத்தல் அல்லது புறக்கணிப்புக் காரணமாக விதிவிலக்குக்கு விண்ணப்பிப்பதற்கு, முதலில் அந்த உறவை விட்டு நீங்கள் வெளியேற வேண்டும். குடிவரவு அதிகாரி ஒருவரை நீங்கள் தொடர்பு கொள்ளும் போது, அந்த துன்புறுத்தல் அல்லது புறக்கணிப்பை நிரூபிப்பதற்கு உங்களால்

முடிந்தளவு அதிகமான தகவல்களை நீங்கள் கொடுக்க வேண்டியிருக்கும். வேறுபட்ட வகை சான்றுகளுக்கான சில உதாரணங்கள் உள்ளடக்குபவை:

- நகர்காவலர் அறிக்கைகள்
- மருத்துவ அறிக்கைகள்
- பெண்கள் காப்பகப் பணியாளர் அல்லது சமூக ஆதரவு நபரிடமிருந்து கடிதங்கள்
- நீதிமன்றப் பத்திரங்கள்
- நிழல்படங்கள், மின்னஞ்சல்கள், குரலஞ்சல்கள்
- சாட்சிகளின் கடிதங்கள் அல்லது உறுதிமொழி அளிக்கப்பட்ட வாக்குமூலங்கள்

துன்புறுத்தல் அல்லது புறக்கணிப்புக் காரணமாக அந்த உறவு முறியும் வரை, உங்களைப் பொறுப்பேற்றவருடன் ஒரு உண்மையான உறவில் நீங்கள் வாழ்ந்தீர்கள் என்பதற்கான ஆதாரத்தையும் நீங்கள் காட்ட வேண்டும். இதை நிரூபிக்கும் சில வழிகளாவன:

- உங்களுடைய முகவரியும் உங்களைப் பொறுப்பேற்றவரினது முகவரியும் ஒன்றாக இருந்தது என்பதைக் காட்டும் முக்கியமான பத்திரங்கள் (சாரதி அனுமதிப்பத்திரம், உடல் ஆரோக்கிய அட்டை (health card), பயன்பாட்டுக் கட்டணங்கள்)
- பகிரப்பட்ட நிதி அறிக்கைகள் (வங்கிக் கணக்குகள், கடன் அட்டைகள், சொத்தின் குத்தகை அல்லது சொத்துடமை)
- உங்களைத் தம்பதிகளாக அறிந்தவர்களிடமிருந்து வந்த கடிதங்கள்

உங்களைப் பொறுப்பேற்றவரை விட்டு விலகுவது பற்றி நீங்கள் யோசித்தால், உங்களுடைய உதவி மற்றும் பாதுகாப்புக்காக, பெண்கள் அமைப்பு அல்லது பெண்கள் காப்பகம் ஒன்றிலிருந்து உதவி பெறுவதும் குடிவரவுச் சட்டத்தரணி ஒருவரிடமிருந்து உடனடியாக சட்டரீதியான ஆலோசனை பெறுவதும் மிகவும் முக்கியமாகும்.

**b. அந்த 2 வருட நிபந்தனைக் காலம் முடிவடைந்த பின்னர் என்ன நடக்கும்?**

நிபந்தனைக்குட்பட்ட நிரந்தர வதிவுரிமை உங்களுக்குக் கிடைத்திருப்பதுடன் உங்களைப் பொறுப்பேற்றவருடன் கனடாவில் நீங்கள் 2 வருடங்கள் வாழ்ந்திருந்தால், பின்பற்றுவதற்கு வேறு எந்த மேலதிக விசேட நிபந்தனைகளும் இன்றி நீங்கள் ஒரு நிரந்தர வதிவிடவாளராக வருவீர்கள். உங்களுடைய துணையிடமிருந்து நீங்கள் பிரிந்து விட்டீர்கள் என்பதற்காக உங்களுடைய நிரந்தர வதிவிடவாளர் நிலையை நீங்கள் இழக்க மாட்டீர்கள் அத்துடன் கனடாவிலிருந்து வெளியேற்றப்படவும் மாட்டீர்கள். உங்களைப் பொறுப்பேற்றவர் தொடர்ந்தும் அந்த 3-வருட பொறுப்பேற்றல் காலம் முடியும் வரைக்கும் உங்களுக்கான நிதி ஆதரவுக்கு பொறுப்பாக இருப்பார். உங்களுடைய துணைவர், உங்களைத் தொடர்ந்து பராமரிக்க முடியாமல் அல்லது பராமரிக்காமல் இருந்தால் உங்களைப் பராமரிப்பதற்காக நீங்கள் சமூக உதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

உங்களுடய 2 வருட நிபந்தனைக் காலத்தின் போது, நிபந்தனை பூர்த்திசெய்யப்படவில்லை என குடிவரவு அதிகாரிகள் நினைத்தால், அந்த விதிகளை நீங்கள் பின்பற்றுவதற்கான ஆதாரத்தைக் கேட்கலாம். பொறுப்பேற்கப்பட்ட துணைவர் ஒருவர், அவளைப் பொறுப்பேற்றவருடன் ஒரு உண்மையான உறவில் தொடர்ந்தும் இருக்கின்றாரா என்பதை உறுதிப்படுத்துவதற்கு எழுந்தமானமான சோதனைகளையும் அரசாங்கம் செய்யமுடியும்.

உங்களுடைய 2 வருட காலம் முடிந்த பின்பும் கூட, நிபந்தனையுடன் நீங்கள் இணங்கி இருக்கவில்லை என அரசாங்கம் கண்டுபிடித்தால், அவர்கள் புலன்விசாரணை செய்ய முடியும். நிபந்தனையுடன் நீங்கள் இணங்கி இருக்கவில்லை என அவர்கள் கண்டுபிடித்தால், உங்களுடைய நிரந்தர வதிவுரிமையை இழக்கும் அபாயம் உங்களுக்கு ஏற்படலாம். இப்படி நடந்தால், ஒரு குடிவரவு அதிகாரியுடன் கதைப்பதற்கும், உங்களுடைய நிரந்தர வதிவுரிமை நிலை இரத்துச் செய்யப்பட முன்னர் ஒரு விசாரணைக்குப் போவதற்கும் உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்.

## அகதிகள் மற்றும் பாதுகாப்புத் தேவைப்படுவோர்

நீங்கள் கனடாவில் இருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு அகதியாக அல்லது பாதுகாப்புத் தேவைப்படும் ஒருவராக நீங்கள் இருந்தால், உங்களுடைய உறவு முறிவடைந்து விட்டது என்பதற்காக கனடாவில் இருந்து உங்களை வெளியேற்ற முடியாது.

உங்களுடைய துணையுடன் உங்களுடைய அகதிக் கோரிக்கையை நீங்கள் சமர்ப்பித்திருப்பதுடன், அந்த உறவை முறிக்கவும் நீங்கள் விரும்பினால், அகதி விசாரணைக்கு முன்பாக உங்களுடைய துணையின் கோரிக்கையிலிருந்து உங்களுடையதை வேறாக்கக் கூடியதாக இருக்கலாம். இப்படிச் செய்வதற்கு உங்களுக்கென ஒரு சட்டத்தரணியை நீங்கள் நியமிக்க வேண்டும். உங்களுடைய துணைவரால் நீங்கள் துன்புறுத்தப்பட்டிருந்தால், ஏதாவது பத்திரங்களில் கையொப்பமிடும்படி நீங்கள் வற்புறுத்தப்பட்டிருந்தால் அல்லது உங்களுடைய துணைவருக்கோ அல்லது உங்களுடைய சொந்த நாட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்களுக்கோ நீங்கள் பயப்பட்டால் உங்களுடைய சட்டத்தரணிக்கு அதை நீங்கள் சொல்லவேண்டும்.

உங்களுடைய அகதிக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், தீர்மானம் பற்றி அகதி மேன்முறையீட்டுப் பிரிவுக்கு (RAD) நீங்கள் மேன்முறையீடு செய்யக் கூடியதாக இருக்கலாம். மேன்முறையீடு செய்வதற்கும் உங்களுடைய பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கும் மிகவும் குறுகிய கால அவகாசமே உண்டு. RAD ஐ அகதிக் கோரிக்கையாளர்கள் அனைவரும் அணுக முடியாது. உதாரணத்துக்கு, குறிப்பிடப்பட்ட (பாதுகாப்பான) நாடுகளைப் பிறப்பிடமாகக் (DCO) கொண்ட ஒருவராக நீங்கள் இருந்தால் RAD க்கு மேன்முறையீடு செய்ய முடியாது.

**குறிப்பிடப்பட்ட (பாதுகாப்பான) பிறப்பிட நாடுகள் (DCO)** என அழைக்கப்படும், "பாதுகாப்பானவை" என அரசாங்கம் கருதும் நாடுகளின் பட்டியல் ஒன்றை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. ஒரு DCO வில் இருந்து நீங்கள் வந்தீர்களா எனக் கண்டறிவது முக்கியமானது, ஏனெனில் உங்களுடைய கோரிக்கை

ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், DCO வில் இருந்து வரும் ஒரு அகதிக் கோரிக்கைக்கான காலநேரம் மிகவும் குறுகியது அத்துடன் உங்களுக்கு இருக்கும் தெரிவுகளும் மட்டுப்படுத்தப்பட்டவை. முடியுமான விரைவில் நீங்கள் இது பற்றி ஒரு குடிவரவுச் சட்டத்தரணியுடன் கதைக்க வேண்டும்.

## சட்டபூர்வமான எந்தத் தகுதிநிலையும் இல்லாமை

சட்டபூர்வமான தகுதிநிலை இல்லாமல் நீங்கள் கனடாவில் இருக்கலாம். ஒரு வருகையாளராக அல்லது மாணவராக உங்களுக்குக் கிடைத்த நுழைவு அனுமதி காலாவதியாகியிருந்தால் அல்லது உங்களுடைய அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தால் அல்லது இந்த நாட்டுக்குள் சட்டவிரோதமாக நீங்கள் வந்திருந்தால், இது நடக்கலாம். அனைத்துப் பெண்களுக்கும் உள்ளது போல் அதே குடும்பச் சட்ட உரிமைகள் உங்களுக்கும் இருந்தாலும் கூட, குடிவரவு அதிகாரிகளின் கவனத்துக்கு நீங்கள் உட்பட்டால், நீங்கள் நாடு கடத்தப்படலாம். உள்ளூர்ப் பெண்கள் அமைப்புக்கள் அல்லது பெண்கள் காப்பகங்களில் நீங்கள் உதவி பெறக்கூடியதாக இருக்கலாம்.

உங்களுடைய துணைவரின் அல்லது உங்களுடைய சொந்த நாட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்களின் தீங்குக்கு நீங்கள் பயப்பட்டால் அகதிக் கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும் சாத்தியம் பற்றி உங்களுடைய சட்டத்தரணியுடன் நீங்கள் கதைக்க வேண்டும்.

## மனிதாபிமானம் மற்றும் இரக்கத்தின் அடிப்படையிலான (H மற்றும் C) விண்ணப்பம்

உங்களுக்கு சட்டபூர்வமான தகுதிநிலை இல்லை அல்லது உங்களுடைய குடிவரவு நிலை அபாயத்தில் இருக்கிறது என்றால், **மனிதாபிமானம் மற்றும் இரக்கத்தின் அடிப்படையிலான (H மற்றும் C) விண்ணப்பத்தை** ஒரு தெரிவாகக் கருதலாம். கனடாவில் இருப்பதற்கான அனுமதியை அரசாங்கத்திடம் கேட்பதற்கு, H மற்றும் C விண்ணப்பம் ஒன்று விசேடமான சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படுகின்றது. H மற்றும் C விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிப்பது நாடு கடத்தப்படுவதிலிருந்து உங்களைப் பாதுகாக்க மாட்டாது. முடியுமான விரைவில்

சட்டபூர்வமான ஆலோசனையை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். உங்களுடைய நிலைமைக்கு ஏற்ப வேறுவகையான குடிவரவுக் கோரிக்கைகள் உங்களுக்குப் பொருத்தமானவையாக இருக்கலாம்.

உங்களுடைய உறவில் துன்புறுத்தல் இருந்திருந்தால், உங்களுக்கு என்ன நடந்தது என்பதை உங்களுடைய விண்ணப்பத்தில் சொல்ல வேண்டும். H மற்றும் C விண்ணப்பம் ஒன்றில் கேட்கப்படக்கூடிய சில கேள்விகளாவன:

- கனடாவில், உங்களுக்கு நெருக்கமான தொடர்புகள் உள்ளதா?
- உங்களுக்கு நீங்களே நிதிரீதியான ஆதரவு கொடுக்க முடியுமா?
- உங்களுடைய சொந்த நாட்டுக்கு நீங்கள் திரும்பிச் சென்றால் கணிசமான இடர்களை நீங்கள் எதிர்கொள்ள வேண்டுமா?

H மற்றும் C விண்ணப்பத்தால் பாதிக்கப்படும் அனைத்துப் பிள்ளைகளையும் கூட, அவர்கள் கனடாவில் பிறந்திருந்தால் என்ன, பிறக்காவிட்டால் என்ன, குடிவரவு அதிகாரிகள் கருத்தில் கொள்ள வேண்டும்.

உங்களுடைய அகதிக் கோரிக்கை பற்றிய தீர்மானத்துக்காக நீங்கள் காத்திருந்தால், H மற்றும் C விண்ணப்பத்தை நீங்கள் சமர்ப்பிக்க முடியாது. உங்களுடைய அகதிக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், பின்வரும் காரணங்களால் உங்களுடைய வாழ்க்கை ஆபத்தில் இருக்கின்றது என உங்களால் காட்ட முடியுமானதாக இருந்தால் அன்றி, உங்களுடைய கோரிக்கையை நிராகரித்த தீர்மானம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 12 மாதங்களுக்கு H மற்றும் C விண்ணப்பத்தை நீங்கள் சமர்ப்பிக்க முடியாது.

- உங்களுடைய சொந்த நாடு உங்களுக்குத் தேவையான ஆரோக்கிய அல்லது மருத்துவக் கவனிப்பைத் தர முடியாது˙ அல்லது
- கனடாவிலிருந்து உங்களை வெளியேற்றுவது ஒரு பிள்ளையில் எதிர்மறையான ஒரு விளைவை ஏற்படுத்தும். இந்தப் பிள்ளை உங்களுடைய பிள்ளையாக இருக்க வேண்டும் என்பதில்லை – இது உங்களுடன் ஒரு உறவிலுள்ள மற்றும் உங்களின் வெளியேற்றத்தால் நேரடியாகப் பாதிக்கப்படும் ஒரு பிள்ளையாக இருக்கலாம்.

உங்களுடைய நிலைமைக்கு எது சிறந்த தெரிவு என நீங்கள் தீர்மானிப்பதற்கு ஒரு சட்டத்தரணி உதவலாம்.

## வீட்டு வன்முறையும் துன்புறுத்தலும்

பல காரணங்களுக்காக உறவுகள் முறிவடைகின்றன. அந்தக் காரணங்களில் ஒன்றாக, உங்களுடைய துணைவரின் வன்முறை அல்லது துன்புறுத்தல் இருக்கலாம். உங்களுடைய துணைவரால் அல்லது குடும்ப அங்கத்தவரால் நீங்கள் துன்புறுத்தப்பட்டதாக குடிவரவு அதிகாரிகளுக்கு நீங்கள் சொன்னால், கனடாவில் இருப்பதற்கான உங்களுடைய குடிவரவு விண்ணப்பத்தை அவர்கள் செயல்முறைப்படுத்தும் போது, அதை அவர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

உங்களுடைய துணைவர் ஒரு வன்முறையாளர் அல்லது துன்புறுத்துபவர் என்றால் மேலதிக தகவல்களுக்கு, தாக்கப்பட்ட பெண்களுக்கான உதவித் தொலைபேசி இணைப்பினை அழையுங்கள்:
416-863-0511
1-866-863-0511 (toll free)
1-866-863-7868 (TTY)

உங்களுக்கு உடனடியான ஆபத்து இருந்தால், நகர்காவலரை (அழுத்துங்கள் 911) நீங்கள் அழைக்க வேண்டும்.

### நகர்காவலரை ஈடுபடுத்துதல்

பெண்களைத் துன்புறுத்தல், கனடாவில் சட்டத்துக்கு விரோதமானது. உங்களுடைய துணைவர் உங்களைத் தாக்கியுள்ளார் என நகர்காவலர் நம்பினால், அவன் அல்லது அவளுக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டு ஒன்றை அவர்கள் தாக்கல் செய்வார்கள். அவர்கள் அப்படிச் செய்வதை நீங்கள் விரும்பாவிட்டாலும் கூட அவர்கள் குற்றச்சாட்டைத் தாக்கல் செய்வார்கள். உங்களுடைய துணைவரை நீங்கள் தாக்கியுள்ளீர்கள் என நகர்காவலர் நம்பினால், நீங்களும் குற்றம் சாட்டப்படலாம்.

உங்களில் குற்றம் சாட்டப்படாவிட்டாலும் கூட, கனடாவில் உங்களுக்கு சட்டபூர்வமான தகுதிநிலை இல்லை என்பதை நகர்காவலர், முடிக்குரிய வக்கீல்(அரசாங்கச் சட்டத்தரணி) அல்லது நீதிமன்ற அதிகாரி கண்டுபிடித்து, குடிவரவு அதிகாரிகளுக்கு அறிவிக்கலாம். அப்படி நடந்தால் நீங்கள் தடுத்துவைக்கப்பட்டு, நாடுகடத்தப்படலாம்.

நீங்கள் ஒரு நிரந்தர வதிவிடவாளராக இருந்தாலும் கூட, ஒரு குற்றவியல் தண்டனை ஒரு நபரின் குடிவரவு தகுதிநிலையைப் பாதிக்கலாம் அத்துடன் நாடு கடத்தலுக்கு வழிவகுக்கலாம். குறித்த சில குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், நிரந்தர வதிவிடவாளர்கள் நாடுகடத்தப்படலாம். உங்களுடைய துணைவர் நாடுகடத்தப்பட்டிருப்பதுடன், அவன் அல்லது அவள் உங்களைப் பொறுப்பேற்கும் செயல்முறையை மேற்கொண்டிருந்தால், உங்களுடைய குடிவரவுத் தகுதிநிலையும் ஆபத்துக்குட்படலாம். கனடியக் குடியுரிமை பெற்ற ஒருவராக நீங்கள் இல்லாமலிருப்பதுடன் ஒரு குற்றவியல் குற்றத்துடனும் நீங்கள் சம்பந்தப்பட்டிருந்தால், ஒரு குற்றவியல் சட்டத்தரணி மற்றும் ஒரு குடிவரவுச் சட்டத்தரணி, இருவரிடமும் உடனடியாக சட்டபூர்வமான ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## குடிவரவாளர் நிலையிலுள்ள பெண்களுக்கான ஏனைய குடும்பச் சட்ட விவகாரங்கள்

நீங்களும் உங்களுடைய துணைவரும் இன்னொரு நாட்டிலிருந்து கனடாவுக்கு வந்திருப்பதுடன், நீங்கள் பிரியும் போது, நீங்களோ அல்லது உங்களுடைய துணைவரோ கனடாவை விட்டு வெளியேற முடிவுசெய்தால் குடும்பச் சட்ட விவகாரங்கள் மேலும் சிக்கலானதாக அமையலாம்.

கீழ்வரும் பொதுவான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளலாம்:

- பிள்ளைகளுடன் இடம்மாறல்
- பிள்ளைகளுடன் போக்குவரத்துச் செய்தல்
- பிள்ளையைக் கடத்தல்
- ஒன்ராறியோவுக்கு வெளியே வாழும் ஒருவரிடம் நிதி ஆதரவைப் பெறல்

பிள்ளைகளுடன் இடம்மாறல், பிள்ளைகளுடன் போக்குவரத்துச் செய்தல் அல்லது பிள்ளையைக் கடத்தல் பற்றிய மேலதிக தகவல்களுக்கு "பிள்ளைக்கான பொறுப்பு மற்றும் அணுகல்" எனும் எங்களுடைய கையேட்டைப் பாருங்கள்.

நிதி ஆதரவைப் பெறல் பற்றிய மேலதிக தகவல்களுக்கு, "பிள்ளைக்கான ஆதரவு" மற்றும் "வாழ்க்கைத்துணைக்கான ஆதரவு" எனும் எங்களுடைய கையேட்டைப் பாருங்கள்.


Ontario

The Law Foundation of Ontario
Building a better foundation for justice in Ontario

- *இதில் சொல்லப்பட்டுள்ள அபிப்பிராயங்கள் FLEW ன் அபிப்பிராயங்கள் ஆகும். இவை மாகாணத்தின் அபிப்பிராயங்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.*
- *Law Foundation of Ontario நிதி உதவி அளிக்கும் அதே வேளையில் இந்த வெளியீட்டின் உள்ளடக்கம், Foundation ன் அபிப்பிராயங்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.*


*நெருக்கமான உறவு ஒன்று முறியும் போது வன்முறைக்கான ஆபத்து அதிகளவில் உண்டு. உங்களுக்கு உடனடி ஆபத்து இருந்தால், 911 ஐ அழையுங்கள். நீங்களோ உங்களுக்குத் தெரிந்தவரோ ஆபத்தில் இருந்தால் உதவி பெறுவது பற்றிய தகவல்களுக்கு FLEW இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.*

*ஒன்ராறியோவில் வாழும் பிரெஞ் பேசும் பெண்ணாக நீங்கள் இருந்தால், குடும்ப சட்ட நீதிமன்ற செயல்முறைகளின் போது பிரெஞ் மொழிச் சேவைகளை அணுகுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. உங்களுடைய உரிமைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு, ஒரு சட்டத்தரணியை, ஒரு சமூக சட்ட மையத்தை அல்லது Femaide ஆதரவு இணைப்பை 1-877-336-2433, TTY 1-866-860-7082 ல் தொடர்பு கொள்ளுங்கள்.*

*பிரெஞ்சில் சேவைகளை எப்படி அணுகுவது என்பது பற்றிய மேலதிக விபரங்களை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca ல் நீங்கள் பார்க்கலாம்.*

## பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)
6. குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)
7. குடும்பச் சட்டச் சமரசம (TML 007)
8. **குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)**
9. குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)
10. குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)

* *இந்தக் கையேடு பல வடிவங்களிலும் மொழிகளிலும் கிடைக்கின்றது. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து www.onefamilylaw.ca ஐப் பார்வையிடுங்கள். உங்களுடைய குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் விளங்கிக்கொள்வதற்கு உதவும் மேலதிக விடயங்களையும் இந்த இணையத்தளத்தில் நீங்கள் பார்க்கலாம்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir